# ஆத்மஜோதி



அன்னை கிருஷ்ண பாய்

ஓம்




# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே – சுத்தானந்தர்

சோதி 5 | விஜய௵ புரட்டாதி மாசம் திகதி 1 | சுடர் 11


## பொருளடக்கம்


| | |
|---|---|
| அன்னை கிருஷ்ணபாய் அஞ்சலி ... ... | 281 |
| அன்னையின் உன்னதபலத்தை உணருங்கள்... ... | 282 |
| நாமலிகித ஜெபயக்ஞம் (யாகம்) அல்லது எழுத்துமூலம் இறைநாமசெபம்பண்ணுதல்... ... | 283 |
| காயத்ரி மந்திரமும் அதன் கருத்தும் ... ... | 287 |
| ஸ்ரீராம தாரக மந்திரப்பெருமை ... ... | 288 |
| பக்குவமும் குருவும் ... ... | 292 |
| ஞானவாணி ... ... | 293 |
| சிவயோகந் தரிசித்தசிவயோகசித்தர் ... ... | 294 |
| பிரார்த்தனை ... ... | 297 |
| தியாகராஜரின் மனேவுறுதி ... ... | 298 |
| மனிதன் தன் வாழ்க்கையை உயர்த்தும் விதம் ... | 300 |
| பொதுவணக்கம் ... ... | 301 |
| கந்தரநுபூதியிலிருந்து ஒரு பாட்டு ... ... | 302 |
| சத்தி வணக்கம் ... ... | 305 |
| செய்தித்திரட்டு ... ... | 306 |



## ஆத்ம ஜோதி

✽ ஆயுள் சந்தா ரூபா 75/- ✽ வருடசந்தா ரூபா 3/

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்
60 டல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.


# அன்னை கிருஷ்ணபாய் அஞ்சலி

—(○●○)—

தென்கன் னடஞ்செய் சிவபுண் ணியத்தால்,
உன்னத மாய்வந் துலகில் இருள்கடி,
முனிராம தாசரின் முளரித்தா ளடைந்து,
இனித்துய குருநிலை எய்தினை போற்றி!
அன்னவர்க் கன்னையாய் அருகினி லமர்ந்தே
பன்னருஞ் சேவை புரிந்தனை போற்றி!
மன்பதை முழுதையும் மக்களாய்க் கருதி
உன்செல்வர் பாசம் உதறினை போற்றி!
இன்று செய்தார்க் கினியவே செய்வதில்
தன்னிக ரில்லாத் தற்பரை போற்றி!
ஓதா துணர்ந்த மூதறி வுடனே,
கீதை போதிக்குநிஷ் காமிய கர்மப்
பாதையை வாழ்வால் விளக்குவாய் போற்றி!
ஆதர வில்லா ஹரிசனங் கட்கு
மாதா வாய்ப்பணி புரிவாய் போற்றி!
ஆனந் தாஸ்ரமம் அருள்நிலை யத்தில்
ஞான மழைபொழி நாயகி போற்றி!
தன்பெருமை யறியாத் தனிப்பெரு மாட்டி!
உன்பெருமை உரைத்தல் எவர்க்கும் அரிதாம்
ஓயாக் கவலையால் உளம்நைந் துருகிச்
சேய்போல் வந்துன் சேவடி யடைந்து,
நீயே கதியென நிற்கும் அன்பர்தந்
தாயே! கிருஷ்ண பாயே! போற்றி!

—(●)—

# அன்னையின் உன்னத பலத்தை உணருங்கள்!


நாம் இப்பொழுது காணும் உலகம் சக்தியின்கீழ் இயல்புகளோடு இணக்கமுற்ற மனிதர்களின் அதிகாரத்தில் பெரிதும் அடங்கியுள்ளது. அவர்கள் மூலமாக அகந்தை, துரோகம், கொடுமை பரவி உலகில் நாசமும் துன்பமும் மலிந்துள்ளன. இந்தப் பயங்கர அலையை வெல்வதற்கு, மனிதவர்க்கத்தில் உள்ளத்திலே உறங்கிக்கிடக்கும் பராசக்தியின் உன்னத பலத்தை எழுப்பவேண்டும்.

உலகில் நீதியும் சாந்தியும் நிலைபெற வேண்டுமெனவிரும்பும் அன்பர்களே, எழுந்திருங்கள்! உங்கள் உள்ளத்தே நிலைபெற்றுள்ள தெய்வ அன்னையை உணர்ந்து, அவளின் ஒளியை உலகில் நிறைக்கும் ஆத்மீக இயந்திரமாகுங்கள்! அப்படியாகி, உலகெங்கும் அழிவு வேலையை ஆரம்பித்துள்ள இருட்சக்திகளை எதிர்த்துப் போராடுங்கள்! அவற்றை வெல்லுங்கள்!

சோம்பரோடு, ஒற்றுமையின்றிப் பலவீனராக இருப்பதற்கோ, உங்கள் பலத்தை பயனற்ற போட்டி, பொறாமைப் போராட்டங்கள், சச்சரவுகளில் வீணாகக் கழிப்பதற்கோ இது சமயமல்ல. உங்கள் தெய்வீக இயல்பின் உன்னத நிலையில் நிலைத்து நின்று, உலக நாடகத்தை நடத்தும் மகா சக்தியின் கட்டளைக் கிணங்கி, அவள் துணையை வேண்டுங்கள்!

அன்பும் ஒற்றுமையும் மிளிரும் உளத்தினையுடைய நன் மக்கள் மூலம் உலகில் சாந்தியை நிலவச்செய்ய, தெய்வ அன்னை விழிப்போடு காத்திருக்கிறாள். நித்திய வாழ்வுடைய குழந்தைகளே, அவளைச்சார்ந்து அவளிடமிருந்து ஒளியும் ஆற்றலும் பெறுங்கள்! 'உலகின்பேரன்னைக்கு வெற்றி ஏற்படுவதாக!' என்பதே உங்கள் லட்சிய வாக்காகுக.

—சுவாமி இராமதாஸர்.



## நாம லிகித ஜெப யக்ஞம் (யாகம்)
### அல்லது
## எழுத்து மூலம் இறைநாம செபம் பண்ணுதல்.

(ஆசிரியர்)

பல்லாயிரம் வருஷங்களாகப் பழந்தமிழன் கையாண்டு வந்த முருகன் வழிபாட்டில் இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று சக்திகளும் ஒருங்கே அமைந்துள்ளன. இச்சக்திகள் மக்களிடம் அடங்கியுள்ள உண்மையை, நவீன உள நூலாராய்ச்சியாளர் இப்போது தான் ஏற்றுள்ளனர். நம்முள் ஒடுங்கிக்கிடக்கும் இம் மூன்று சக்திகளும் வெளிப்பட்டுத் தொழிற்பட, நாதங்கடந்த நிலையை அடைய வேண்டும் என்பது தத்துவ சாஸ்திர முடிவு. அந்த நிலையை அடைவதற்கு வேண்டப்படுவது முறையான ஜெப, யோக, தியான வழிபாடுகளாகும். மனிதப்பிறவியின் விழுமிய நோக்கத்தை நன்குணர்ந்த தன்மை உதயமாகும்வரையில் எவ்விதசாதனையும்வலுப்பெறுது. சக்திகளின் எழுச்சிகளும் தீவிரமாகாது.

ஆத்மீகத்துறையில் சாதகர்க்கு உற்சாகம் ஊட்டவும், அநுபூதிப்பேற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், பெண் உலகிற்கு ஓர் திலகமாகவும் இன்று விளங்குபவர் தூய **அன்னை கிருஷ்ணபாய்** ஆவர். அவரிடம் நாம் காணக்கிடக்கும் அன்பு அருள் ஆனந்தம், அறிவு ஆற்றல் அமைதி, முதலாய தெய்வ சம்பத்துக்களெல்லாம் மேலே நாம் எடுத்துக்காட்டிய இச்சை கிரியை ஞான சக்திகளின் ஒளியை அன்னார் பெற்றுள்ளாரென்பதை நமக்கு நன்கு விளக்குகின்றன. 1903-ம் ஆண்டில் அவதரித்த இந்த மங்கையற்கரசிக்கு இம்மாத மஹாளய அமாவாசைதினத்தன்று ஐம்பதாவதுவயது நிறைவாகின்றது. எனவே அவரின் இந்த ஆண்டு ஜெயந்தி விழா பொன்விழாவாகும். அன்னையின் தூய தியாக வாழ்வின் (சந்நியாச வாழ்வு) வெள்ளிவிழா 1955-ம் ஆண்டு கார்த்திகைமாசத்திலாகும். இவ்விழாக்குறித்து அன்னையிடம்விண்ணப்பம் செய்த அன்பர்கட்கு, அவர்களின் ஆத்மீக வளர்ச்சிக்காகவும் அவனியின் அமைதிக்காகவும் ஓர் அரிய சாதனை இயக்கத்தை தமது குருநாதரான சுவாமி இராமதாஜரின் ஆசியுடன் அருளியுள்ளார். அதுவே இங்கு தலையங்கமாகக்குறிக்கப்பட்டுள்ள இறைநாம செப வேள்வியாகும். இந்தச் சாதனை எவ்

க்குப் பெருமை பாராட்டும் அல்லது புகழ்கோரும் தன்மையில் அமையாமல், பொது நன்மைக்கே தோன்றிய இயக்கமாக நடைபெற வேண்டும் என்பதே அன்னையாரின் கோரிக்கை.

இக்கலியுகத்திற்குகந்த பக்தி சாதனைகளுள் இறை நாம ஜெபம் மிகவும் எளிய இனிய மார்க்கமாகும். அதைக்கையாண்டு அனுபூதி பெற்ற மஹான்களுள் தலைசிறந்து விளங்குபவர் **சுவாமி இராமதாஸர்.** ராமநாம மகிமையை இருபதாம் நூற்றுண்டு உலகுக்கு விளக்கவே அவர் உடல் கொண்டு உலாவுகிறுர் எனச்சுருக்கமாகக் கூறிவிடலாம். ராமன், சிவன், விஷ்ணு, அல்லா, கடவுள் என்னும் சொற்ளெல்லாம் ஒரே கருத்தையுடையன. 'ராமன்' என்ருல் தசரதகுமாரன் என்று பலர் கருதிவிடுகின்றனர். இது ஓர் தப்பான அபிப்பிராயம். சைவம், வைஷ்ணவம், சாக்தம் ஆகிய மூன்று மதங்களையும் ஒருமைப்படுத்தி நிற்பது ராமநாமம். இந்த உண்மையையும், எப்படி 'ராம' என்பது தாரக மந்திரமாய் அமைந்துள்ள தென்பதையும் ஸ்ரீ சீதாராம சாஸ்திரியவர்கள் இம்மாத ஆத்மஜோதிக்கென விசேடமாக வரைந்துள்ள அரிய கட்டுரையில் காண்க. பலர் இது வரையில் அறிந்திராத தத்துவங்கள் இக்கட்டுரையில் அடங்கியுள்ளன.

இனி எழுத்துமூலம் இறை நாமம் செபித்தல் என்பதைப்பற்றியும் அதன் விதிகள் குறித்தும் சிறிது விளக்கந்தருவோம். பல்வகைப்பட்ட ஜெப சாதனைகளைப்பற்றி ஹிந்தி, வங்காளம், கன்னடம், மஹாராட்டியம் முதலாய வட நாட்டு மொழிகளில் பல நூல்கள் உள. சுவாமி சிவானந்தரின் முயற்சியால் ஆங்கிலத்தில் கூட சில நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனல் தமிழ் மொழியில் ஒன்றுமே கிடையாது. இப்பெருங்குறை காரணமாகவே மூன்று ஆண்டுகட்கு முன் கதிர்காமத்தில் அன்பர்கள் சிலர் அகண்ட நாமசங்கீர்த்தனத்தை ஆரம்பித்தபோது, அதைப்பார்த்த, கேட்ட தமிழர்கள் அதின் உட்கருத்தும் நோக்கமும் விளங்காது மயங்கினர், வியப்புற்றனர். தென்நாட்டிலும் இக்குறையிருக்கவே செய்கிறது. ஆகையால் விதிகளைச்சற்றே விபரமாக விளக்க வேண்டியது எமது கடமையாகின்றது.

இந்த நாம ஜெப வேள்விக்கு ஆசி கொடுத்த பெரியார்கள் குறித்த இருபத்தைந்து மாதஎல்லைக்குள் (1-10-53—31-10-55) குறைந்தது இருபத்தைந்து கோடி மந்திரங்களாவது வரையப்படவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்கள். நாளொன்றுக்கு ஒவ்வொருவரும்



200-மந்திரங்கள் எழுதுவதாக விரதம் கொண்டால் மாசம் ஒன்றுக்கு ஒருகோடி மந்திரம் நிறைவேற 1660-க்கு மேற்பட்ட சாதகர்கள் தேவைப்படும். இத்தொகை பெரிதல்ல. முதியோர், இளைஞர், ஆண், பெண் என்ற வித்தியாசம் எதுவுமின்றி, நடைபெறும் சாதனையாகவிருப்பதால், ஒவ்வொரு குடும்பத்திலும் சராசரி நாலுபேர் சேர்ந்தால், 416 குடும்பங்கள் சேர்ந்து இவ்வேள்வியை முடிக்கலாம். தினசரி 200 மந்திரங்கள் எழுதுவதற்கு, எடுத்துக்கொண்ட மந்திரத்தின் நீளத்துக்குத் தக்கவாறு அரைமணிநேரம் முதல் ஒரு மணிநேரம் வரை தேவைப்படும்.

### இந்த அரிய வேள்விக்குரிய நிபந்தனைகள் பின்வருமாறு:-

(1) *இந்த வேள்வி 1-10-53ல் ஆரம்பமாகி 31-10-55ல் முடிவடையும்.*

(2) *பங்குபற்ற விரும்பும் அன்பர்கள் தங்கள் பெயரையும் விலாசத்தையும் 1-10-53க்கு முன்னரேயே சுவாமி இராமதாஸருக்கு அறிவிக்கவேண்டும்.*

(3) *எழுதும் மந்திரம் 'ஓம் ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்' ஆகவோ அல்லது குரு உபதேசமாகப்பெற்ற 'நமசிவாய', 'சரவணபவாய', 'நாராயணுய' முதலாய மந்திரங்களுள் ஒன்ருக இருக்கலாம். எந்த மொழியிலும் எழுதப்படலாம். எண்ணிக்கை எடுப்பதற்கு வசதிப்படும்முறையில் வரிகள் நேராகவும், நாமங்கள் ஒரே கணக்காகவும், ஒவ்வொரு பக்கத்திலும் எழுதப்படும் வரிகள் ஒரே தொகையினதாகவும் இருக்கவேண்டும்.*

(4) *உபயோகிக்கப்படும் கொப்பிகள் எடுத்துக்கொண்ட நாமத்தை தினம் ஒன்றுக்கு 200 ஆக மாசம் முழுவதும் எழுதுவதற்குப் போதியதாக இருப்பின் நலம்.*

(5) *மாச இறுதியில் கொப்பிகளைத் தனித்தனியாகவோ அல்லது ஒரு இடத்திலுள்ள அன்பர்களின் கொப்பிகளை ஒன்ருகச் சேர்த்தோ ஆனந்தாசிரமத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.*

(6) *ஒவ்வொரு கொப்பியின் முகப்பில் எழுதியவரின் விலாசமும், நாமங்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். இவை ஆங்கிலத்திலிருப்பின் விசேடம்.*

(7) *எழுதிய கொப்பிகளைத் திருப்பிப் பெற விரும்புவோர் வெள்ளி விழா முடிந்த பின்னர், தபாற் செல க்குரிய முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.*

இவ்வேள்வியால் பெறும் பலாபலன்வெறும் எண்ணிக்கையில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. ஆதலால் பக்தி சிரத்தையுடனேயே நாமங்கள் வரையப்படவேண்டும்.

மேலும் விபரம்வேண்டுவோர் ஆத்மஜோதி ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

*[இந்த யாகம்பற்றிய மாதாந்த அறிக்கைகள் ஆனந்தாச்சிரமத்திலிருந்து வெளிவரும் 'VISION' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ஆத்மஜோதியிலும் அவை இடம்பெறும்.]*

**சுவாமி இராமதாஸரின் விலாசம்:-**

SWAMI RAMADAS,
ANANDASHARAM.
ANANDASHRAM POST.
Via-KANHANGAD
(S: INDIA)

## கதிவேறில்லை.

*எடுப்பு*

கதிவே றில்லை கடையனெனையாள்
கருணைச் சுடர்க் கண்ணனேயிவ் வேளை (கதி)

*தொடுப்பு*

துதிசெய்யும் அன்பர் துயர்போக்கி இன்பக்
கதிகாட்டும் ஞானக் கற்பக விளக்கே! (கதி)

*முடிப்பு*

சங்கரா,த் ரிபுராந் தக,கைலை வாசா!
சர்வபாவ நாசா, பர்வதசர் வேசா!
மங்கைகௌரி நாதா வான்புகழும் போதா
மைந்த னுக்குன் பாதம் சந்ததமும் தாதா! (கதி)

—பரமஹம்ஸதாஸன்.



## காயத்ரி மந்திரமும் அதன் கருத்தும்.

ஓம்பூர் புவஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தீயோயோந: ப்ரசோதயாத்.
என்பது காயத்ரி மந்திரம்.

பதவுரை:- ய: = எவன் ந: = நமது தீய: = நினைப்புகளை, ப்ரசோதயாத் = ஞான ஒளி பெற, அருட்சோதி பெற, உந்துகிறுனே அவன் வரேண்யம் = மிகவும் சிறந்த சவிது: = சிவசூரியன், பரமாத்ம சூரியன்;

ஓம் = ஓங்காரமாயிருப்பவன்,

பூ: = மண்ணுலகு, சட உலகு புவ : = அந்தரிக்ஷம், நடுவுலகு, உயிருலகு ஸுவ : = மேலுலகு, விண்ணுலகு, மனவுலகு, இவை யனைத்திலும் மேவி விளங்குவோன்; தத் = அந்த தேவஸ்ய = இறைவனது பர்க: = அருட்பெருமையை தீமஹி: = தியானிப்போமாக!

*விளக்கவுரை:-*

கீழும் மேலும் நடுவும், உடல் உயிர் மனம் எங்கும் பரவி ஓங்காரமாகி, சச்சிதானந்தமாகி, அனைத்திற்கும் மேலான சிவசூரியன், சிவஜோதி; அருட் பெருஞ்சோதி இறைவன். அவ்விறைவன் நம் நினைப்புகளை ஞானவொளிபெற ஊக்குவான். அப்பரம்பொருளின் பெருமையைத் தியானிப்போமாக!

இதுவே காயத்திரியின் பொருள். 'தத்ஸவிது:' என்பதற்கு சூரியன், நாராயணன், சிவன், பரமாத்மன் என்று அவரவர் கொள்கைக்கேற்றபடி பொருளுரைப்பர். அனைத்தும் அவரவர் உள்ளத்துறையும் அருளிறைவனையே குறிக்குமென்க. பெயர் வடிவங்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. இக்காயத்ரி மந்திரத்தை அனைவரும் உபாசித்துப் பயன்பெறலாம். சித்தசுத்தியுடன் ஜபிக்க வேண்டும், அவ்வளவுதான் வேண்டப்படுவது, நேயமாகிய தேரில் ஏறி, நினைவுற்று, தியானமுற்று, அருளுறவுபெற்று, மனத்தைமயக்கும் சகமாயங்களில் தோயாமல் வாழவேண்டும்,

# ஸ்ரீராம தாரக மந்திரப் பெருமை

——O—O——

(ஸ்ரீ T. K. சீதாராமசாஸ்திரியார்.)

"யக்ஞாநாம் ஜபயக்ஞோஸ்மி" (ப. கீ. 10. 25.) என்பது கண்ணன் அருள்வாக்கு. "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலிலும்" ஆண்டவன் நாமத்தை உச்சரிப்பதும், மனனஞ்செய்வதும் பன்மடங்கு சிறந்தனவென்ற வுண்மையை வற்புறுத்தவே, அறம் வளர்க்க அவனியிற்றோன்றிய அமலன் மேலே தந்துள்ள கீதா வாக்கியத்தில் "வேள்விகளுள் யான் ஜபமென்னும் வேள்வியாக விருக்கிறேன்" என்று கூறியுள்ளான். இறைவனது நாமஜபமே சிறந்த வழிபாடென்பதை நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்கள் பாசுரங்கள்தோறும்வற்புறுத்தியுள்ளனர். "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்கின்றார் அப்பரடிகள்; "நற்றுணையாகப் பற்றினே னடியேன் நாராயணாவென்னும் நாமம்" என்பது திருமங்கை மன்னன் திருவாக்கு.

இறைவன் நாமத்தை இரண்டுவிதமாகச் செபிக்கலாமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஒன்று, "உச்சைஃ" என்ற உரத்துச் சொல்லும் முறை, மற்றையது 'உபாமசு" என்ற மௌனமாக மனத்தில் செபிக்கும்முறை. இவ்விருமுறைகளுங்கையாளப்படும்போது இறைவன் இரண்டு தனிப்பட்ட நிலைகளிற் கருதப்படுகிறான். மௌன செபத்தின்போது, அவன்தந்தையாக, பரஞானத்தின் திருவுருவாகப் பாவிக்கப்படுகிறான். அந்த நிலையில், உள்ளத்தின் ஒவ்வொரு அசைவையுங்கூட உணருஞ்சக்தி அவனுக்குண்டு. உரத்து நாமமுச்சரிக்கப்படும்போது ஆண்டவன் தாயாம் நிலையையடைந்துவிடுகிறான். தாயென்றால் அன்பின், அதாவது உணர்ச்சியின் வடிவமல்லவா? உணர்ச்சியைக் கவருவதற்கு உரக்க உச்சரித்தல் உதவுகிறது. ஆன்மா துன்பத்துக்குள்ளாய்த் தவிக்கும்போது, ஆண்டவன் நாமத்தை வாய்விட்டுச் சொல்லுவதின்மூலம் அமைதியைப்பெறுகிறது. பிள்ளைகளுக்குத் தந்தையைத் திருப்திப் படுத்துவதிலும் பார்க்க தாயைத் திருப்திப் படுத்துவது மிகவும் இலகு. ஒரு தரம் 'அம்மா' என்று வாய்விட்டழைப்பதாலேயே உணர்ச்சி வழிப்படும் தாய் உச்சிகுளிர்ந்து விடுகிறாள். இந்தவுலகியலையே, உலகத்தந்தையும் தாயுமான கடவுளிடத்திலும் காணப்படுவதாக ஆன்றோர் கற்



பனை செய்துள்ளனர். ஆனால், உண்மையில், பரம்பொருள், உயர்திணை அஃறிணைப் பாகுபாட்டிற்கும், ஆண் பெண்ணென்னும் பாற் பாகுபாட்டிற்கும் அப்பாற்பட்டதென்பதுமெய்ஞ்ஞானியர் கண்டுள்ள பேருண்மை.

சைவ உபநிஷத்துக்களுள் ஒன்றாகிய **பஸ்மஜாபலோபநிஷத்தில்** இரண்டு சிவமந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று ஆறெழுத்தாலான பிரணவத்தோடு கூடிய பஞ்சாட்சரமான "ஓம் நமஃசிவாய என்பது; எட்டெழுத்தான "ஓம் நமோ மஹாதேவாய" என்பது மற்றையது. "ஷடக்ஷரஃ அஷ்டா(க்ஷ)ரோ வா சைவோமந்த்ரோஜபநீயஃ" என்பது உபநிஷத் வாக்கியம். (மந்திரங்களின் எழுத்தெண்ணிக்கையில் மெய்யெழுத்துக்களை நீக்கிவிடுவது இந்துமதக்கொள்கை.) இவற்றுள் ஆறெழுத்தான பிரணவத்தோடு கூடிய பஞ்சாட்சரத்தை மௌனசெபத்திற்கும் அஷ்டாட்சரமான "ஓம் நமோ மஹாதேவாய" என்பதை உரத்துவாய்விட்டுச் செபிப்பதற்கும்ஆன்றோர் பயன்படுத்தி வந்துள்ளனர், இன்றைக்கும், தமிழ் நாட்டிலே, சாத்திரமுணர்ந்த சைவப்பெரியார்கள், இறைவன் நாமத்தை உரக்கச் சொல்ல வேண்டிய விடங்களில் "மஹா தேவ" என்ற நாமத்தையே வாய்விட்டுக் கூறுவதைக் கேட்கலாம். நாமசங்கீர்த்தனத்தின்போதும் நாமெல்லோரும் சேர்ந்து சொல்லும் மந்திரம் "ஹர ஹர மகா தேவ" என்பதே. எனவே, இது காறுங் கூறியவற்றால் பஞ்சாட்சரப் பரம்பொருளான சிவத்தையும், அஷ்டாட்சரம் சக்தியையும் முறையே குறிக்கின்றனவென்பது பெறப்படுகின்றது.

இனி, இறைவனுக்கு, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, போகசக்தி, என நாலுசக்திகள் உள்ளனவென்பதும், அவைகளுள் முன்னையவிரண்டும் வேறாகப் பிரிக்கப் படாதவையென்பதும், பின்னைய விரண்டு சக்திகள், பிரிக்கப்பட்டுத் தனி முகூர்த்தங்களாகத் திருமால், உமையென்று வணங்கப்படுவதும் சைவ சமய சாத்திரங்களிற் கண்டுள்ள உண்மைகளாகும். திருமால் கிரியாசக்தியும், உமையம்மை போக சக்தியுமாவார்கள். திருமால் சிவத்தின் சக்தியென்பதைத் திருநாவுக்கரசர் பெருமான் "அரியலாற் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்ற தமது தேவார அடிகளில் வற்புறுத்துகின்றார். இக் காரணத்தால், திருமாலுக்குரிய மந்திரமான "ஓம் நமோ நாராயணாய" என்பது எட்டெழுத்துடையதாய், அஷ்டாட்சரமாயிற்று. இதைவிட "ஹ்ரீம் நமஃசிவாய" என்ற சக்தி பஞ்சாட்சரமும் வேறாகவுண்டு,

ஆகவே சிவமந்திரமான பஞ்சாட்சரமும், சக்திக்கும், திருமாலுக்குமுரியதான அஷ்டாட்சரமும் சேர்ந்துபதின்மூன்றெழுத்துக்களாகி திரயேதசாட்சரமாகின்றது. இந்தச் சேர்க்கையைக் குறிப்பதற்கே, சமரச சன்மார்க்க நெறிகண்ட பெரியார்கள், இரண்டு மந்திரங்களினதும் பிரதான வெழுத்துக்களான பீஜாட்சரங்களை ஒன்று சேர்த்து. "ராம " என்ற மந்திரத்தை உருவாக்கினர். அதன் விளியுருவமே "ராம"என்பது. இதைவிட்டு, "ராம" என்பது தசரதன் மகனாகிய மனிதனைக்குறிப்பதென்றும், அது வைணவர்க்கு மாத்திரமுள்ள மந்திரமென்றும் கூறுவது சிறிதும் பொருத்தமன்று. இராமன் சரிதையை முதன்முதலெழுதிய வான்மீகியே நாரதராலுபதேசிக்கப்பட்ட "ராம நாமத்தைச் செபித்ததனாற்றான் வேட்டுவ நிலையினின்றும் திருந்தி முனிவரானாரென்று இராமாயணமே கூறுகின்றது. மேலும், வால்மீகி, இராமாயண காலத்தவர் என்பதும் இராமாயணத்திலேயே காணக்கிடக்கின்றது. இதிலிருந்து இராமன் உலகத்திற்றோன்ற முன்பே; 'ராம' நாமம் மந்திரமாகச் செபிக்கப்பட்டு வந்ததென்பதை ஒருவாறுஊகிக்கலாம். இத்தகைய "ராம" மந்திரத்தை பதின்மூன்றெழுத்தாக்கி "ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம" என்று விரித்தும், ஆன்றோர் செபித்துவருகின்றனர்.

இந்நிலையில், பீஜாட்சரமென்றால் என்ன? அஷ்டாட்சரம், பஞ்சாட்சரம் ஆகிய மந்திரங்களினின்றும் முறையே "ரா"வும் மகாரமும் ஏன் பீஜாட்சரங்களாக கொள்ளப்பட்டிருக்கின்றன? மற்றையவெழுத்துக்கள் பீஜாட்சரங்களாகாவா? சிவத்தைக்குறிக்கும் பீஜாட்சரமான மகாரம் பின் வைக்கப்பட்டுள்ளதன் காரணமென்ன? என்ற பலவகைஐயங்கள் எழுகின்றன.

முதலாவதாக, பீஜாட்சரங்கள் அல்லது பிரதானவெழுத்துக்களென்றால் என்னவென்பதை ஆராய்வோம். ஒருசொல்லிலிருந்து எந்தவெழுத்தைவேறாகப்பிரித்து எடுத்தால்,புதிதாக ஏற்படும்சொல், தொடக்கத்திலிருந்தகருத்திற்கு நேர்மாறானகருத்தைத்தருமோ, அந்தவெழுத்தேபீஜாட்சரம் அல்லதுபிரதான வெழுத்தாகும். பிராணிகளில் ஆண் பெண்கள் உடலமைப்பில் ஒன்றாகவிருப்பினும் அவற்றை வேறுபடுத்தும்குறிகள்போல இப்பீஜாட்சரங்கள் அமைந்துள்ளன. இக்காரணம்பற்றியே, இவை பீஜாட்சரங்கள் என்ற பெயரைப் பெற்றனபோலும் இந்தஅளவையின்படி 'நமசிவாய'என்பதில்மகாரத்தையெடுத்துவிட்டால், 'நன்மையே வடிவான இறைவனுக்கு' வணக்கம் என்ற



கருத்திற்குமாறாக,'நசிவாய' என்றுஆகி'சிவனுக்குஅன்று''மங்களத்திற்கு அன்று' என்ற கருத்தைத்தருகின்றது. மற்றைய வெந்தவெழுத்தைப் பிரித்தெடுத்தாலும், புதிதாகவேற்படுஞ்சொல் எழுத்தின் கூட்டமாயமையுமேயொழிய எவ்விதகருத்தையுந்தராது. இதேபோன்று, அஷ்டாட்சரத்திலிருந்து 'ரா'வை எடுத்து விட்டால் 'ந அயநாய'(வடமொழியில் ரகரத்திற்குப் பிறகுவரும் நகரம் ணகரமாகும்) என்றாய் 'இருப்பிடத்திற்கு அன்று 'வீட்டிற்கு அன்று' 'முத்திக்கு அன்று' என்ற விபரீதக்கருத்தைதரும். "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரம் 'சகல சீவராசிகளுக்கும் இருப்பிடமான இறைவனுக்கு வணக்கம்' எனப்பொருள்படும். திருமாலைப் 'பரந்தாமன்'என்றழைப்பதும்இக்காரணம்பற்றியே. திருமால் வணக்கம் சக்திவழிபாட்டோடு கூடியதென்பதையும் குறிப்பாகவுணர்த்துகின்றன. இதே கருத்து திருமால் உந்திக்கமலத்தில் பிரமனைத் தோற்றுவித்து அவன்மூலம் உலகைச் சிருஷ்டித்தான் என்னும்புராணக்கதையிலும் விளங்கக்கிடக்கின்றது.

அடுத்தபடியாக 'ராம' நாமத்தில் 'ரா'முன்னும் மகாரம் பின்னுமாய் வைக்கப்பட்டிருப்பதற்கும் காரணமுண்டு. பகவான் சங்கரர் தமது 'சௌந்தர்யலகரி'யில் 'சிவ: சக்த்யா யுக்தோ யதிபவதி சக்த: ப்ரபவிதும்' என்று கூறியுள்ளார். சிவம்தொழிற்பட்டு ஆற்றலோடு கூடியிருக்கிறதென்றால், அது சக்தியோடு கூடியிருப்பதே அதன் காரணம் என்பதே அதன் தாத்பரியம். சக்தியின் காரியமான பிரபஞ்சத்தைக் கொண்டுதான் மனம் வாக்குக்கெட்டாத சிவத்தையுணர முடியும். இந்தவுண்மையை உணர்த்துவதற்கே, தெய்வப்புலவரான திருவள்ளுவர் 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்று உலகத்தை முதலாக வைத்துக்கூறுகின்றனர். இக்கருத்தை யறிவுறுத்தும் நோக்கத்தினால், சமயப்பெரியோர்கள். இறைவன் சக்தியோடு கூடியிருக்கும் நிலையைக் குறிப்பிடும்போதெல்லாம் சக்திநாமம் முன்னாகவும், இறைவன் நாமம் பின்னாகவும் வைத்துக்கூறும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். 'பார்வதீ பரமேசுவரன்' 'இலட்சுமீ நாராயணன்' முதலிய நாமங்கள் சிறந்த வுதாரணங்களாகின்றன. ஆகவே 'ராம' நாமத்திலும், சக்தி மந்திரமான அஷ்டாட் சரத்தின் பீஜாட்சரமான 'ரா' முன்னும் சிவமந்திரமான பஞ்சாட்சரத்தின் பீஜாட்சரமான மகாரம் பின்னுமாக வைக்கப்பட்டுள்ளது.

எனவே 'ராம' நாமம், சைவம், வைணவம், சாக்தமாகிய, மூன்று பதங்களையுமொன்று சேர்க்கின்றது, எந்தக் கிளைச்சமயத்தைப் பின்பற்றினாலும், இந்துக்கள் ஒன்றுசேர ராமதாரக மந்திரம் வாய்ப்பளிக்கின்றது.

பல்லவி

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்

அனுபல்லவி

நாரா யணஓம் நமச்சி வாயவெனும்
சார மானநல்ல தாரக மந்திரம் (ஸ்ரீராம்)

சரணம்

நாரதர் வால்மிகி முனிவர் நவின்றது
ஆரமு தாயன்பர்க் கானந்த மீன்றது (ஸ்ரீராம்)

காமாதிக் கள்வரைக் கட்டுடன் ஒழிப்பது
நேம நிஷ்டையுள்ள நெஞ்சினிற் செழிப்பது, (ஸ்ரீராம்)

---

## பக்குவமும் குருவும்.

—O—O—

குருவையடையவேண்டுமென்று கவலைப்படவேண்டியதில்லை. உரிய பக்குவத்தைப் பேணிக்கொண்டிருந்தால், குருவை எதிர்ப்படலாகும், அதுவரை உள்ளங்கனிய வேண்டும்.

காமம், சினம், பொய், வஞ்சகம் முதலியவற்றை நீ இன்னும் கைவிடவில்லை. மனமே! உனக்கு ஒரு குருவேண்டும் என்கின்றாய். உனக்கு நாணம் என்பது சிறிதும் இல்லைப்போலும்!

குருவேண்டும் என்று கண்கண்டவர்களையெல்லாம் சரணடையாதே. அவர்களில் உன்னைவிட இழிவானவர்களும் உளர். தமக்கே ஒழுகவேண்டும் நெறிதெரியாமல் இருக்கும் பொழுது பிறர்க்குஉபதேசிக்கப்பலர் முன்வருகின்றார்கள். ஞான நெறியை ஓர்ந்து அறிந்தவர்கள், அதனைக்கடைப்பிடித்து வருபவர்கள், ஞானத்தைஅடைந்தவர்கள் என்னும் இவர்கள் தம் தம் நிலைக்கு ஏற்ப உபதேசிக்குந் தகுதி உடையவர்கள். ஆனால் ஞானத்தை அடைந்தவர்களுடைய உபதேசமே அனுபவத்துக்குச் சிறந்தது.

ஓர் அறிஞர்.



# ஞானவாணி

(கட்டளைக்கலித்துறை)

1 மங்கல யாழிசை மீட்டிப் புவனம் மலர்த்தவரும்
செங்கதிர்ச் செல்வியே! பொங்கும் கடல்கண்ட தேன்மதியே!
அங்கம் புளகித் தருளுண்ணும் பேரின்ப ஆர்வமருள்;
தங்கக் குமுத மலர்வாய்ப் புனித சரஸ்வதியே!

2 விள்ளற் கினிய வெளியாய்த் துலங்குநல் வித்தகிஎன்
உள்ளத்துறையும் உயிரே! மெய்ஞ்ஞான ஒளிப்பிளம்பே!
பள்ளத் திடைவீழ் புனல்போல்என் னுள்ளருள் பாய்ச்சிடுவாய்;
தெள்ளூற் றவருள் தெவிட்டா தினித்திடும் தீங்கனியே!

3 உள்ளத் துதிப்பவை எல்லாம்நின் பொற்றுட் குவகையுடன்
துள்ளுங் கவிதை மலராய்ச் சொரிந்துயர் தூய்மைபெறத்,
தெள்ளுந் தமிழறி வோடுள் ளுணருந் திறமுமருள்;
வெள்ளைக் கமலத் துறைஞான வாணீ!என் வித்தகியே!

4 எங்கும் பொலிந்திடும் நின்னெழிற் சோபைகண் டென்னிதயம்
பொங்கிக் களித்துக் கவிமலர்மாலை புனையவருள்;
துங்கமெய்ஞ் ஞானியர் துய்க்கும் துரியச் சுடரமுதே!
எங்கள் குலக்கொழுந் தே!தமிழ் வீணை இசைப்பவளே!

5 மடமைக் கொடும்பேயை மாய்த்தென துள்ளம் மலர்த்தி,அதில்
திடமிக்க பேரறி வாயுருக் கொண்டு திகழ்ந்திடுவாய்!
படமுடி யாதினித் துன்பம்; உனது பதமிலையேல்,
அடிமைக் குலகில் அணுவும் இடமில்லை அம்பிகையே!

—பரமஹம்ஸதாஸன்.

### சிவயோகந் தரிசித்த

# சிவயோக சித்தர்.

(சுத்தானந்தர்)

சிவயோகமாவதென்ன? சித் அசித், உண்மை இன்மை, வித்தை அவித்தை, அறிவு அறியாமை ஆகிய இரு தன்மைகளையும் இன்னதென்று தெளிதல்; அறிவையே பற்றித் தவயோகத்துட் புகுந்து, சுயம் பிரகாசமான சுத்தான்ம ஜோதியாதல்; பிறப்பையும் இறப்பையும் வளர்க்கும் அவயோகங்களை, மலயோகங்களை, பாச நெறிகளைச் சாராது, நிமலமான, சுத்த சிவக்கலப்புடனே நிற்றல்; வேறெவ்வகைப் போகமுங்கருதாமல், கற்புள்ளமனைவி கணவன்சம்போகத்தையே விரும்புவது போலப் பதியோகத்தையே நுகர்ந்து, சிவானந்தந்திளைத்தல், இதுவே **சிவயோகமாம்**. இதையே நவயோக சித்திபெற்றதிருநந்தி தேவர் நமக்கு அளித்தார்.

உலகெங்கும் இறைவன் தானே தானாகத் தாக்கற்றிருக்கும் உண்மை, அமரரும் அறியாத சிவதுரியானந்தம், திருமன்றுள் ஆடும் திருவடிநிழல், அருள்வெளிவாழ்க்கை இப்பேறுகளைத் திருநந்திதேவர் எமக்களித்தார். இப் பேறுகளைப் பெற்ற சிவசித்தர் மனவெளி, துரிய வெளியில் போய்விரவும்; அவர் பாச அன்பு, பதியன்பிற்போய் அடங்கும்; ஜீவவொளி, சிவ பரஞ்சோதியில் ஒடுங்கும். இவற்றின் வகை தெரிந்து அனுபவித்துத் தெளிந்தவரே சிவசித்தராவர். சித்தர் என்பவர் இந்தப்பூலோகத்திலே சிவலோகந் தரிசித்தவர்; அப்பரைப் போன்று உலகெல்லாம் சிவமயங்கண்டோர். அவர் பரநாதமறிந்தவர்; சத்தங்கடந்த சுத்த மௌனிகள். அவர்கள் என்றுமுள்ள பொருட்கலப்பிலேயே வாழும் நித்தியர்; மும் மலங்கள் அணுகாநிமலர்; பிறவி நோயற்ற நிராமயர். அவர் பரமுத்தர். அவர் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, ஒப்பில்லாத பரமானந்த ஜோதியுட் புகுந்து செப்பரிய சிவங்கண்டு, அதையே சொரூபமாகத் தெளிந்து அத்தன்மையாக, சிவமயமாக அமர்ந்திருப்பர். சித்தர் பாச இருளற்றவர்; 'எனது' 'யான்' அற்றவர், சக்தர், சதாசிவத்தன்மையர் ஆவார்.

## தத்துவங்கள்.

*முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்*
*ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்*
*செப்பரி யசிவங் கண்டுதான் தெளிந்து*
*அப்பரி சாக அமர்ந்திருப் பாரே!*



ஒரு கடிகாரத்தில் சக்கரங்களும் விசைகளும் இருப்பதுபோலவே, பலதத்துவங்கள் கூடி நமது தூல, சூக்கும, காரண, சரீரங்களை இயக்குகின்றன. வேதாந்திகள் பிரகிருதி தத்துவம் 24—ம், புருஷன் அல்லது ஆன்மாவுடன் சேர்ந்து தத்துவம் 25என்பர். சித்தாந்திகள் 36 தத்துவங்காண்பர். அவை 24 அசுத்தம், 7 சுத்தாசுத்தம் 5 சுத்தம் என மூன்று வகையாம். 5-பூதம், 5 தன்மாத்திரை, தசேந்திரியங்கள், 4அந்தக்கரணங்கள் ஆகிய 24ம் **அசுத்ததத்துவங்களாம்**. காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன், மூலப் பகுதி, ஆகியஏழும் **சுத்தாசுத்த** தத்துவங்களாம். சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசத்வம், சுத்தவித்தை ஆகிய ஐந்தும் சுத்த சத்துவங்களாம். இந்த முப்பத்தாறு தத்துவப் படிகளையும் கடந்து உள்ளொளி புக்கு, சிவங்கண்டு அதுவே அனைத்துமென் றறிந்து அமர்ந்திருப்பர் சித்தர். கடலைக் கலந்த உப்பைப்போலச் சிவத்தைக் கலந்தோர் சிவமாயிருப்பர்; சிவம் எங்குமிருப்பதால் அவரும் எங்குமிருப்பர்; உலகெங்கும் சிவன் செயலையே, அவன் அருளாடலையே சாட்சியாகக் கண்டுகொண்டிருப்பர். சிவசித்தர் வந்து, இருந்து, செல்லும் முக்காலமும் ஒரு நீரோட்டமெனக் கருதிக்காலங்கடந்த கடவுட் பொருளிற்கலந்திருப்பர். அதுவே சுத்த முத்திநிலையாம்.

## சும்மா இருத்தல்.

இந்நிலையில் சுத்தசிவ சித்தருக்குத் தன் முனைப்பும் குணங்குறியுணர்வும் ஒழிந்துபோம். தற்போதமழிந்து சதாசிவபோகத்தில் ஆழ்ந்திருப்பர் சித்தர். அந்நிலையை **"இழவு வந்து எய்திய சோம்பு"** என்றார் திருமூலர். 'இழவு' என்றால் தன்னிழப்பு; 'சோம்பல்' என்றால் பந்ததொந்தமறத் தன்முனைப்பறவொடுங்கி, இறைவனுடன் கலந்து, அவனன்றி வேறில்லாமற் **சும்மா** இருத்தலாம். "தேசம் முன்னேற வேண்டாவா? சும்மா இருக்கும் சோம்பேறிவாதம்நமக்குவேண்டா. போம்!" என்பர் உட்பொருளறியாதார். "சும்மா இருத்தல்" சாமானியம் அன்று. "சும்மா இருக்கின்ற திறம் அரிது – சற்றாகிலும்." சூரியன் ஆகாயத்தில் சும்மா இருக்கிறான். அவனால் எத்தனை தொழில்கள் இயல்பாய் நடக்கின்றன! கருவி கரணங்களின் சேட்டையொடுங்கிச் சிவக்கலப்புடன் சும்மா இருக்கும் யோகி, ஒரு சக்திப்பிழம்பாவான். அவனைச் சுற்றிச் சிற்சக்திக் கதிர்கள் சூட்சுமமாகவீசிக்கொண்டிருக்கும். அவன் சந்நிதானம் ஆத்மசுத்தி தரும்; தெய்வவுணர்வைப் பொலிவிக்கும். அவன் சக்தி பரவிப் பரவி, மனிதசமுதா

யத்தில் பல புதிய நலங்கள் உண்டாகும். அப்படிப்பட்ட யோக சித்தராலேதான் இன்றும் நமது நாடு புண்ணிய பூமியாக விளங்குகின்றது. அத்தகைய சித்தரின் சக்தி மௌனமாகப் பரவியே நமது முன்னேற்ற இயக்கங்களைத் தூண்டி நடத்துகின்றனர். ஜீவ-சிவைக்கிய நிச்சல நின்மலநிலையே சித்தர் பரிபாஷையில் 'சோம்பல்,' 'தூக்கம்' எனப்படும். "ஒரு பம்பரம் தூங்குகிறது" என்னும்போது, அது சொக்கிநிற்கும் நிலையைக் குறிக்கிறது. சிற்சக்தி பாய்ந்ததும் ஓமொலி கேட்கும்; அதுவே சுருதி. அச்சுருதியில் லயித்துத் தியானத்தில் உறங்குபவர் யோகியர். பிறகுசுருதிகடந்த, சத்தமற்ற உபசாந்த நிலையெய்தும்; அந்நிலையிலேதான் "சோம்பல்" அல்லது 'நிச்சல சமாதி' உணர்வாகும் – ''சோம்பல் உணர்வு சுருதி முடிந்திடம்'' அத்தகைய நிச்சல உபசாந்தர்குண தொந்தமற்ற நிர்விகாரமான, சுத்த சிதாகாச வெளியிலே சதாகால சகசநிட்டையிற் கிடப்பர்.

*சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே*
*சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே*
*சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்*
*சோம்பர் கண்டார் சுருதிக்கண் தூக்கமே.*

(இப்போது விரைவாகஅச்சேறிவரும் 'திருமந்திரவிளக்கம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

---

*சீடன் குருவென்னச் சீவன் சிவனென்ன*
*மூடவகங் கார முழுமோகம் - கூடும்பாழ்ம்*
*பேதமதி சற்றும் பிறவாத மோகமே*
*போதநமஸ் காரப் பொருள்.*







# பிரார்த்தனை

(அ. இராமசாமி ஜோகூர்பாரு மலாயா)

தாயே! என் உள்ளத்தில் நீ தோன்றுவதும் மறைவதுமாக எவ்வளவு நாள் இயங்கப் போகிறாய்? உன் அருள் சுவையை உணர்ந்த நான், உன்னைமறந்து நாள்கடத்த இயலுமா? உன்திருவடியைதொடர்ந்து பற்றி உன் அருளைப்பெற சக்தியற்றவன் என்ற திரு உளமா உனக்கு? வேண்டாம் தாயே! உன் திருவடியில் அன்பு கொண்ட நான், சகல கலாவல்லமையின் துணைகொண்டு உன்தெரிசனம் பெற முடியும். இது தான் என் நம்பிக்கையின் முழு அளவு. தாயே! உன் தெரிசனம் கிடைப்பதற்கு முன் இந்தச் சரீரத்தை அழித்து விடாதே! இதுதான் நான் உன்னிடம்வேண்டும் அரிய வரமாகும். சரீரமாகிய வாளை என்னிடம் கொடுத்து நீ எனக்கு போர்ப்பயிற்சி செய்யலாம். நான் பக்குவகாலம் அடையும்வரை, இந்தப்பயிற்சியே வாழ்நாளை நிரப்பும் அரியசாதனையும் மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடியதுமாகும். என்போன்ற பக்தர்களுடன் நீநெருங்கிய உறவு கொண்டு உன் திருவருள் பிரசாதத்தை வெளிக்காட்டாவிடில் இவ்வுலகில் உன்னை யார் மதிப்பர்? தாயே! நாஸ்திகம் மலியும் இக்காலத்தில் உன்னைப்பற்றியஉரை "ஆத்மஜோதி"யில் இடம்பெறஉன்திருவருள் பிரவாகமடையை என்உள்ளம்பால் திறந்துவிடு, உன்பெருமைபேசுவதற்கும், எழுதுவதற்கும் சகலரும் அறியும்வண்ணம் வாழ்க்கையில் நடந்து விளக்குவதற்கும் என் போன்ற உன்பிள்ளைகள் திருவருட்சந்நிதியில் காத்து நிற்கின்றோம், தாயே!

**உன் திருவடி சரணம்.**

**சுபம்!**

# தியாகராஜரின் மனோவுறுதி

[ தென்னாபிரிக்கா டர்பன் திரு ச-மு- பிள்ளை அவர்கள் ]

"பகவத் பக்திசெய்து அதனால் மனதிலேஊறும் இன்பத்திற்குச் சமானமானதோர் இன்பம் வேறு கிடையாது. பொன்னைக்கொண்டும் பொருளைக்கொண்டும் தேடிக்கொள்ளும் இன்பங்களெல்லாம் மானிடர்களுக்கு துன்பங்களைக்கொடுக்கக்கூடியவைதான்", என்று பரம பாகவத சிரோன்மணியும், சங்கீத வள்ளலுமான ஸ்ரீதியாகராஜர் தம்மை தஞ்சாவூர்மகாராஜா அழைத்துவரச் சொன்னாரென்றுசெய்தி சொல்லவந்த ராஜதூதனிடம் தெரிவித்தாராம். அந்தக் கதையின் வரலாறு வருமாறு.

ஒருநாள் ஸ்ரீ தியாகராஜரின் மாளிகைக்கு தஞ்சாவூர் சரபோஜி மகாராஜாவிடமிருந்து ஒரு தூதர் வந்தார். அவர் ஸ்ரீ தியாகராஜரைப் பணிந்து, 'தங்களை ராஜா அரண்மனைக்கு அழைத்துவரச்சொன்னார். தங்கள் வரவை ராஜா மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறார். தாங்கள் ராஜக்கிரகத்திற்கு வந்து அரசனைப்புகழ்ந்து இரண்டுகிருதிகள்பாடினால் போதும், தங்களுக்கு வெகுமானமாக பத்து வேலி நிலமும், ஒரு பெரிய கட்டித்தங்கமும் கொடுப்பதாகத் தெரிவிக்கச் சொன்னார்," என்று கூறினார்.

"ஐயா! ராஜதூதரே, உங்கள் ராஜாவுக்கு என்ன பித்தம் பிடித்துவிட்டதா? தன்னைப்புகழ்ந்து பாடுகின்றவர்களுக்கு பணம்கொடுப்பதாகச் சொல்லுகிறாரே, இது நியாயமா ஏன் பணத்தை இம்மாதிரி விரயப்படுத்துகிறார்? மேலும் அவர் கொடுக்கும் பணத்திற்கு ஆசைப்பட்டு என் பாட்டுத்திறனைக் கேவலம் நர ஜன்மமான ஒரு ராஜாவைப் புகழ பிரயோஜனப்படுத்துவேனோ? பகவானை அர்ச்சிக்க வைத்திருக்கும் நல்ல புஷ்பங்களை மானிடன்மீது தூவி நாசமாக்குவேனோ?"

"இராஜாக்களும் மானிடர்கள்தானே! அவர்களில்பலர் மானிட சமூகத்தை துன்புறுத்தும் கொடிய வியாதிகளைப் போன்றிருக்கிறார்கள். படிப்புவாசனை இல்லாமல், ஆத்மீக ஞானமில்லாமல், பாவச் செயல்களைச் செய்வதே தொழிலாக காலந்தள்ளுகிறார்கள். அப்பேற்பட்ட இராஜாக்களையா என்வாயினால் புகழ்ந்து பாடுவது? முடியாது முடியாது" என்று தியாகையர் சொன்னார்.

அது கண்ட தூதன் அந்த வைதிகப் பிராமணனை எப்படி ஏமாற்றுவதென்று சற்று சிந்தித்தான். ஒரு உபாயம் அவன் மனதில் பட்



டது. மீண்டும் தியாகராஜ மகானை நோக்கி "சுவாமி, இதோ பாருங்கள்" என்றுதான்கொண்டுவந்திருந்த் பெரியதங்கக்கட்டியைக் காட்டினான். "இந்த பொன்கட்டியைப் பெற்றுக்கொண்டு ராஜக்கிரகத்திற்கு எழுந்தருள கிருபை செய்யவேண்டும்." என்று ஆசைகாட்டினான்.

தியாகராஜ சுவாமி அந்த தங்கக்கட்டியைப் பார்த்ததும், "அந்த அற்ப வஸ்துவை வீசி எறி, யாருக்கு வேண்டும் அந்தத் தங்கம்? மக்கள் மனதை வஞ்சித்து அவர்களை துன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்து துன்பங்களையுண்டாக்கும் விஷமல்லவா அது? ஓய் தூதரே, தங்கத்தைக் கண்டதும் என்மனம் சபலமடைந்து விடுமென்று உமக்கு எண்ணம் போலும்! நான் தினம் ஆராதனம் செய்யும் திவ்விய மங்கள ராமமூர்த்தி விக்கிரகம் தங்கத்தினால் செய்தது. அந்த விக்கிரகத்தினுள் என் ராமமூர்த்தியைத்தான் நான்தரிசிக்கிறேன். எனக்குத் தங்கத்தில் மோகமிருக்குமாயின் அந்த விக்கிரகத்தினுள்ளிருக்கும் தங்கத்திலல்லவோ என் ஞாபகம் பதிந்திருக்கும்? நான் அந்த விக்கிரகத்தை உருக்கிவிட்டிருக்க மாட்டேனா? ஆகவே, என் சித்தம் தங்கத்தைக்கண்டு மயங்கும் சித்தமல்ல. போய்வாரும்," என்று சொல்லிவிட்டு "நிதி சால சுகமா" என்னும் கீர்த்தனையைப் பாடினார்.

மேற்சொன்ன கீர்த்தனையின் கருத்து வருமாறு, "ஓ மனமே, உண்மையைச்சொல்லு என்னைஏமாற்றாதே. சத்தியத்தைச் சொல்லு இராமனைப் பஜித்திருப்பது தித்திப்பா? அல்லது பணமோகம் பிடித்து அலைவது சுகமா?

பாலும், மோரும், வெண்ணெயும் உண்பது ருசியா? என் தாசரதியை நினைந்து பஜித்து மெய்மறந்திருப்பது சுகமா? ஓ மனமே! பொய்யாமல் சொல்லு.

திட புத்தியும், சஞ்சலமற்ற மனமும் போன்ற கங்கையில் குளிப்பது ஆரோக்கியமா? துன்மார்க்கமென்னும் கலங்கிய சகதி நிரம்பிய கிணற்றில் குளிப்பது ஆரோக்கியமா? ஒளியாமல் சொல்லு, மனமே.

செருக்கு மிகுந்த நரமனுஷனை ஸ்துதிசெய்து பாடுவது நன்றா? சர்வலோக காரண்யனான ஜகத்ரக்ஷகனைக் குறித்து பாடுதல் நன்றா? உள்ளதைச்சொல்லு மனமே"

மேற்சொன்ன கருத்துக்கொண்ட பாட்டை ஸ்ரீ தியாகராஜர் பாடினார். ராஜதூதர் அந்தப்பாட்டைக் கேட்டுவிட்டு, பதிலொன்றும் சொல்லாமல் திரும்பிப்போனார்.

# மனிதன் தன் வாழ்க்கையை உயர்த்தும் விதம்.

மனிதன் ஓர் அபூர்வமான பிராணி. உயர்ந்த நிலையில், உயர்ந்த படியிலுள்ள மிருகத்துக்கு ஒருபடி உயர்ந்தவன்; தாழ்ந்த நிலையில், தாழ்ந்த மிருகத்துக்கு ஒரு படி தாழ்ந்தவன். இயற்கையன்னையின் மடியில் தவழ்ந்து, உரையாடி, உண்டு உடுத்துத், தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டான்.

உருமாறிப் பல பிறப்பும் பிறந்தும் செத்தும், தன் பூர்வகதையைபொருவாறுணர்ந்து, 'உறுதி பயக்கும் பொருள் ஒன்றே'யென்பதைத் தெரிந்தான். மனம் சாந்தியடைந்தது. அந்நிலையில் நிற்க அரும்பாடுபட்டு வருகிறான். உலகத்தை இயக்கும் சக்தி ஒன்றே யென்பதையுணர்ந்த பின், உள்ளங் குழைந்து, என்பு நெக்குருகி, ஊராரோடு உறவாடி உற்றதை உணர்த்தி, ஆடியும் பாடியும் ஆவல்தீர்த்துக்கொள்கிறான்.

இவ்வாறு இயற்கையிலுள்ளடங்கிய சக்தியின் வயப்பட்டு, இயற்கைக் குழந்தையாகிய தன்னுடைய ஆற்றலை மாபெரும் சக்திக்கு அர்ப்பணித்து, அடிமைபூண்டு, சமூகத்துக்கோ, சமுதாயத்துக்கோ, நாட்டினுக்கோ, உலகத்துக்கோ, தொண்டு செய்ய முனைகிறான். கற்பனையுலகில் சஞ்சாரம் செய்து, கவிதையுலகில் திளைத்து, அன்பென்னும் அருங்கடலில் மூழ்கி, அரியபெரிய உண்மைகளை அளந்து, அன்னை திருவடிகளில் சமர்ப்பிக்கிறான்.

உலகம் போற்றும் உத்தமர்கள் பலர். இவர்கள் பத்திபரவசர்களுண்டு. கர்மவீரர் அநேகர். ஞானிகள் ஒருசிலர். இவர்கள் எல்லோருமே உலகம் தேசம் இனம், மதம் எல்லாவற்றையுங் கடந்தவர்கள்...... உலக மறிந்தவன் ஞானி; உள்நிலையுணர்ந்தவன் யோகி; கருமம் அல்லது தன்தொழிலை ஓயாது செய்பவன் கர்மவீரன்; இயற்கையன்னையால் தூண்டப்பட்டு இறைவன் நிலையை உணர்ந்து; குழந்தையுள்ளம் பெறப் பெற்றவனாய் பக்தி வெள்ளத்தில் மூழ்கி, பரமனுடன் ஒன்றிநிற்பவன் பக்தன்.

[ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்]





ஓம்

# பொது வணக்கம்

ஹே ப்ரபோ! இவ்வகிலமனைத்தும் படைத்தவர் தாங்கள். இவற்றைக் காத்தருள்பவரும் தாங்களே. புல்லின் நுனியிலும் புஷ்ப இதழிலும் இருப்பவர் தாமே. விரிகதிர் இரவிபாலும் விண்ணக மீன்களுள்ளும் விளங்கி நிற்பவரும் தாங்களே. கருணையளித்து களிப்பருளும் பரம! நினக்கு வணக்கம்.

இன்னருள் இறைவ! இறப்பென்னும் பிணியினின்றும் நான் விடுதலையடைவேனாக. சகலஜீவராசிகளையும் சம நோக்குடன் பார்க்குஞ் சக்தி பெறுவேனாக. பாவமும் மலமும் என்னைப் பற்றாதொழிக. மனந்தனையடக்கும் மதியை யருளுக. உமக்கும் உயிர்க்கும் ஓய்விலா உழைக்கப் பலந்தருவீராக. தங்கள்பணிக்கு என்னை தக்கதோர் கருவியாக்குவீராக. என்னைப்பரிசுத்தனாகவும் பலவானாகவுஞ்செய்வீராக.

உள்ளங்கள் தோறும் உறையும் பரம! மறையில் மறைந்த இறைவ! போற்றி! போற்றி!! எனது கெட்ட எண்ணங்களையும் குறைபாடுகளையும் பலவீனத்தையும் அகற்றுக, என்னைப்பரிசுத்தனாக்கித் தங்கள் கருணைக்கும் ஆசிகளுக்கும் பாத்திரனுமாறு செய்க. ஹே! ப்ரபோ! உயிரனைத்தும் ஒன்றெனப் பிணைக்கும் ஆத்ம சூத்திரம் நீர். உலகெல்லாம் பரந்து எங்கும் ஊடுருவியிருப்பவரும் நீரே.

அஞ்ஞான இருளை அடியோடழிக்கும் திவ்ய ஜோதி நீர். கருணை நிறைந்து அகம் புறமும் வழியும் கடவுள் தாங்கள். நோயற்றவாழ்வில் நான்வாழ்ந்து ஒருமையுடன் தங்களையே நினைந்திருக்கும் வண்ணம் அருள்பாலிப்பீராக. தாயநற்குணவானாகச் சேயெனக்குளவு புகல்வீர்.

சுயஞ்சோதிப் பிழம்பே! தாங்களே எனது தந்தை, தாய் தமையன், நண்பன், சுற்றம், சற்குரு சகலமும். இவ்வுண்மையை நான் என்றும் உணருவேனாக, விருப்பு வெறுப்பு, ஆணவம், காமம், பொறாமை ஆய தீய பேய்கள் எனையணுகாதிருக்குமாக. அகிலமெங்கும் நான் அமைதியும் அன்பும் ஆனந்தமும் வாரிவழங்குமாறு என்னைத்

# கந்தரநுபூதியிலிருந்து ஒரு பாட்டு

*[குகஸ்ரீ இரத்தின சபாபதி நாயக்கர் அவர்கள் எழுதிய அரிய விரிவுரை நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]*

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே.

*(ப-ரை) பணியா என-பணிவிடை யாது (செய்யவேண்டும்) என்று கூறி; வள்ளி பதம் பணியும் - வள்ளியம்மையார் திருவடிகளை வணங்கும்; தணியா-தணிவடையாத; அதிமோக-அளவிலாத வேட்கை கொண்ட; தயாபரனே - அருளுக்கு இருப்பிடமானவனே; திணியான மனோசிலைமீது- கடினத்தன்மை வாய்ந்தமனமாகிய கல்லின் மேல்; உன்தாள் - உனது திருவடியாகிய; அணி ஆர் அரவிந்தம் - அழகு பொருந்திய தாமரை; அரும்புமதோ அரும்புமோ, (எ-று)*

(மறுபக்கம்)

301.ம்பக்கத்தொடர்

தமது இனிய தூதனென ஆக்குவீராக. எனது உடல் பொருள் ஆவியனைத்தும் தங்கள் திருப்பணிக்கும் தாங்கள் படைத்தஇவ்வுலக சேவைக்குமே உரியதாகுக. தங்கள் அமரவாழ்வெனும் மூச்சையானும் உயிர்க்கச் செய்வீர்களாக. உலகமக்களின் சகோதரத்துவத்தை யான் நன்குணருவேனாக. அனைத்துயிரையும் எனதுஆத்ம சொரூபமாகவேஎண்ணி அன்புசெலுத்துவேனாக. ஹே தனிப்பெருங் கருணை நிதியே! தங்களுக்கு எனது தாழ்மையான வணக்கம்,

வாழிய நினதருள் வாழி வாழியவே.

ஆங்கிலத்தில்: சுவாமி சிவானந்தர்
தமிழாக்கம்: சுவாமி சச்சிதானந்த யோகி.



அருள்மேனியன் அறுமுகன். அன்பு வடிவினன் அமலை; அன்பு அருளை நாடும்; நாடும் அன்பில் கூடும் அருள். இதை விளக்கும்வரலாறு கீழ்வருமாறு:-

அன்பானது, வைகுந்தத்தில் திருமால் கண்வழியிரங்கிப் பெண்ணுருவாகிப் பிறந்து. இமயத்தில் ஆறெழுத்தை எண்ணியிருந்து, சடக்கரத்தான் இட்ட கட்டளைப்படி தொண்டை நாட்டு மலையொன்றையடைந்து, மாலாகிய சிவ முனிவரும், திருமகளாகிய மானும் நோக்கிய நோக்கால் ஈர்க்கப்பெற்று, மானின் கருவில் நுழைந்து, முருகா முருகா என்று முனகியது. மற்றொருநாள், உருவாகித் திருவாகி உலகில் உதயம் செய்தது. 'கின்னரநல் யாழொலியோ, கேடில் சீர்ப் பாரதியின் இன்னிசையோ என்றயிர்க்க, இறைவனையெண்ணியேங்கி அழுதது. அவ்வொலிகேட்டு வந்த தவமகன் வேடுவர் தலைமகன் வேல் நம்பியையடைந்தது. எடுப்பார் கைப்பிள்ளையாய், வள்ளி நாமம் வாய்ந்து வளர்ந்தது. வேடர்குல முறைப்படி தினைகாக்கும் காலத்தும், முருகநாமம் மறவா அந்த அன்புருவமுதல்வியிடம், சிவனால் அருள் விளியிலிருந்து வெளியான ஆனந்தவடிவ முருகன் வருகிறான், அருள்மணம் செய்கிறான். திருமணத்தின்முன்னும் பின்னும் அருளாடல் பல நிகழ்த்துகிறான். அந்த ஆடல்களுள் ஒன்று, இந்த பணிவு. உபகாரிகளான வள்ளல்கள் தான் முருகனையறிந்து வணங்கமுடியும். இந்த உபகாரம், சர்வசங்கபரித்யாகமாக முடியும். முருகன்மேல் இச்சையையெழுப்பி, கிரியையில் ஈடுபடுத்தும் மகோபகாரியார் அம்மையார்; அதனால், அத்தேவி வள்ளியார் எனும் நாமம் வாய்ந்துளர். சர்வசங்க பரித்யாகிகளாக்கித் தொழுவோரை மணக்கும் தொல்லோன் குமரன் எனும் பொருளில், "வள்ளல் தொழு ஞானக் கழலோனே, வள்ளிமணவாளப்பெருமாளே" என்ற திருப்புகழ் இங்கு நினைவு கூரத்தகுவது.

இருநிலை முருகனிடம் என்றும் எண்ணப்பெறும் ஒன்று, பேசாதமோனப் பேரின்பநிலை, அதன் மயமாய் இன்பம் அனுபவிப்பவர் தேவானையார். மற்றொன்று, பேசும் ஞானப் பேரின்பநிலை; அதையனுபவிப்பவர் வள்ளியம்மையார். தான் பெற்ற பேறு உயிர்களெல்லாம் பெற, இடையறாது முயலும் வண்மையான வள்ளியாரிடம், வளரும் காதலன் வள்ளல் முருகன். அந்தக் காதல் பெருநிலை, பணியாப் பரனையும் வள்ளியாரிடம் பணிய வைக்கின்றது. சாதாரண அகப்பொருள் இலக்கணம் கொண்டு இறை ஆய வேண்டா அது.

உலகியல், இது அநுபூதி அனுபவம். பக்குவ நிலைகளைப் பரிசீலித்து, உயிர்களை யாள இடையருது திரு முன் வேண்டல் செய்பவர் வள்ளியார். அங்ஙனே அருளஎழுந்தருளும் போதெல்லாம், "கோலக்குறத்தியார்" தொடர்ந்து வருவர். பணிவு தோன்ற முருகனைப்பணிவார் அன்பர்கள். வேண்டுவார் வேண்டுவதே யீதல்வேண்டும் என்று தூண்டுதல்புரிவார் அத்தேவியார்உணர்ந்துகூறும் அவர் மொழிப்படி விரைந்து அருள்கிருன் அந்த விமலன், இந்நிலை யென்றும்நிகழ்வன.

அடியவர்க்கு எவ்வுருவில் அருளவேண்டும்? எந்த அருள்புரிய வேண்டும் என்னும்பொருளில், பணியாது? பணியாது? என்று, வள்ளியாரை நச்சரிக்கின்ருன் நம்பன். அவர் சொல்வதற்குள், விரைந்து பணிமுகம் புரியும் போதும், பணிந்தெழும் போதும் பணியாது என்று இடையருது கேட்கிறது பரமன் திருவாய். பக்தகோடிகட்குப் பணிசெய்யும் வகையில், தணியாத அதிமோகமுடைய தயாபரன் அவன். அந்த அருமையை உணர்கிறபோதே உள்ளம் பாகாய் உருகும்மே! அந்தோ! அந்நிலையும் கைவராத கடினமான மனம் கல்லுக்குத்தான் சமம். சேற்றில் முளைக்கும் செங்கமலம் என்பர். அதுபோல் உருகும் உளத்தில் அவன் அடிக் கமலங்கள் அரும்பும், மலரும், மணக்கும், ஆனந்த அநுபவத்தைச் செய்யும், இளகாத உள்ளத்தில் அரும்பவே இடமில்லையென்றபடி, பின்னிரண்டடிகளை,

*"குறப்பெண் குறிப்பறிந்து அருகணைந்து உன்*
*குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக் குறையிரந்து"*

எனும் முத்துக்குமாரஸ்வாமிப்பிள்ளைத் தமிழுடன் ஒப்பிடத் தக்கதாகும்,

---

உலகமெல்லாம் உயர்நலம் பெருகுக!
அகிலமெங்கும் அமைதி நிலவுக!
பாருலகெங்கும் பூரணம் பொலிக!
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

—சுவாமி சச்சிதானந்த யோகி.



# சத்திவணக்கம்

(சி. இராசரத்தினம் பெரிய நீலாவணை)

*சத்தியுன் சத்திகொண்டே சகமெலா மியங்கவேண்டும்*
*சத்தியுன் சத்திகொண்டே தவமது புரியவேண்டும்*
*சத்தியுன் சக்திகொண்டே தமியனு முணரவேண்டும்*
*சத்தியுன் சத்திதந்தே தவறிடா வகைநீ நல்கே.*

*அன்னைநீ யாதிசக்தி அனைத்துல காளும்தேவி*
*உன்னையான் விட்டுவாழ ஒருகண மியலுமோதான்*
*பின்னையான் பிறவாவண்ணம் பிராட்டியென் னுளமெழுந்து*
*என்னையுன் னருளாற்பற்றி யிறைபணி செய்யவையே*

*மன்னுயிர் தோறும் செறிந்தே மாணருள் நல்குந்தேவி*
*என்னுயி ருன்னதாக்கி யிறைபணி செய்யவைப்பாய்*
*என்னுயிர் தளராவண்ண மெழுந்தரு ளுலகமாதா*
*அன்னையே யாதிசக்தி யபயம்யா, னெழுகமாதோ*

*வெம்பினே னுலகவாழ்வில் விதியெனை யலைத்தவாறே*
*நம்பினே னுலகவாழ்வு நாளுமேசதமென் றின்னும்*
*துன்பிலே யுழலாவண்ணம் தாவடியருள்தா வன்னாய்*
*நம்பினே னுலகமாதா நாயகி போற்றி போற்றி.*

*இருளினாற் புரிந்தபாவ மிறைவி நீ பொறுத்தாளாயேல்*
*அருளினை லென்னையாளு மன்னைவேறுண்டோ வன்னாய்*
*மருளினால் மயங்கியின்னும் மாய்ந்திடா வகைநீகாட்டி*
*அருளினாற் குருவந்தெய்தி யருள்பெற வருள்நீ யம்மா*

*அம்மை தன்னை யடிபணிவார்க்கு*
*அரியதேது முண்டோதொல்*
*இம்மையம்மைப் பேறணைத்து*
*மொருங்கே யெய்த இரங்கிடுவாள்*
*உம்மைவினையும் தாங்கியவள்*
*உளத்தேயிருப்பாள் ஒளிதருளாள்*
*செம்மைமலர்த்தாள் நினைநெஞ்சே*
*தேவியிரங்குவா ளுனக்கே.*

# செய்தித்திரட்டு

## டில்லியில் உபநிடத ஞானவேள்வி.

சென்ற ஆண்டில் பூனா நகரத்திலும், இந்த ஆண்டு சித்திரை மாதத்தில் சென்னையிலும் உபநிடத ஞான யக்ஞம் (வேள்விகள்) மூலம் அரிய அத்யாத்ம சேவை செய்து புகழ் பெற்ற உத்தரகாசி சுவாமி சின்மயானந்தரவர்கள்: இந்தியாவின் தலைநகரமாகிய டில்லி மாநகரத்தில் 12–9–53 தொடக்கம் 10-12–53 வரைக்கும் உபநிடத ஞான வேள்வி நடாத்த இசைந்துள்ளார்கள்.

இந்த ஞானவேள்விக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உபநிடதம் மண்டுக்கியஉபநிடதமும்அதற்கு கௌதபாதர்கள் எழுதியகாரிகையுமாகும். குறித்த 19–நாட்களிலும் தினசரி இரணடு மணித்தியாலத்திற்குக் குறையாமல் சுவாமியவர்கள் விரிவுரை செய்வார்கள். முதல் 21–நாளும் பத்து சாஸ்திரிகளால் குறித்தஉபநிடதத்தின் மந்திரங்கள் ஓதப்படும். பின்பகுதி 41–தினங்களில் அகண்ட மஹாமந்திர கீர்த்தனை நடைபெறும். இறுதி நாளன்று பக்த கோடிகள்.

*“ஹரே ராம ஹரே ராம*
*ராம ராம ஹரே ஹரே*
*ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண*
*கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே”*

என்ற மஹாமந்திரத்தை ஒலி பரப்பிகளின் உதவியுடன் பாடிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகளூடாகஊர்வலம்செல்வார்கள்.

பம்பாயிலிருந்து பகவான் ரமண மூர்த்தியின் உபதேசங்களைக் கொண்டு வெளிவரும் தெய்வீக அழைப்பு (**CALL DIVINE**) என்னும் மாதசஞ்சிகையின் கௌரவஆசிரியர்களில் ஒருவர் சுவாமி **சின்மயானந்தர்** என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அன்பர்கட்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம்



## சமயச் சீர்திருத்த வாதிகட்கோர் அரிய வெற்றி.

சரசாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் சென்றமாதம் (12–9-53) விநாயக சதுர்த்தி கொண்டாடிய விதம் சைவமக்கள் சகலர்க்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விழாக்களுக்கு சின்னமேளத்தை அழைக்கும் வழக்கம் இப்போ அருகிவருகின்றது. எனினும் பெரும்பணச்செலவுகொண்ட பெரிய மேளக்கச்சேரிமீதுள்ள மோகம் குறைந்தபாடில்லை.

இவை இரண்டுமில்லாமல் மாலை ஐந்துமணிதொடக்கம் இரவு இரண்டு மணிவரைக்கும் நடந்த ஓர் வழிபாட்டில் மக்கள் சலிப்பின்றிக் கலந்துகொண்டனர் எனில் எவரால் நம்பமுடியும்? இந்த அற்புதம்தான் விநாயகர் கடாட்சத்தால் சரசாலையில் நடந்ததாகும். அபிஷேக ஆராதனையின்பின் கூட்டுப் பிரார்த்தனையும், “ஆத்மஜோதி” யின் கௌரவ ஆசிரியரால் **பிள்ளையார் வழிபாடு**பற்றி ஓர் விரிவுரையும் நடைபெற்றன. அதன்பின் செல்விகள்: இ. **தனலட்சுமி**, இ. **புவனேஸ்வரி** இருவரும், ஆசிரியர் **நாகலிங்கம்** அவர்களும் பக்திப் பாடல்கள் பாடினர். அதன்மேல் கூட்டுப்பிரார்த்தனை ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டு, முத்தமிழ் மணி **C. S. மணிஐயரின்** கதாப்பிரசங்கம் நடைபெற்றது. இறுதியாக விநாயகப்பெருமான் வீதிவலம் வந்து பக்தகோடிகளுக்கு அருள்பாலித்தார்.

இந்த விதமான புனித முறையில், சதுர்த்தி தினத்தை மக்கள் அனுட்டிக்கச் செய்தபெருமை சரசாலை சமூகசேவா சபையின் தலைவரான திரு. கைலாசபிள்ளையையும் காரியதரிசி சிவஞானத்தையும் சார்ந்ததாகும்,

## பாரதிவிழா.

ஷை விழா செப்டெம்பர் 11–ம்,12–ம் திகதிகளில் சென்னைதியாகராயநகரில்உள்ள ஹிந்தி பிரசாரசபையில் சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் தலைமையில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

13–9–53 ஞாயிற்றுக்கிழமை நாவலப்பிட்டி இந்துவாலிப சங்க ஆதரவில் முத்தமிழ் விழா என்று சொல்லும் வண்ணம் மிகச்சிறப்பாக ஷை விழாக்கொண்டாடப்பெற்றது.

## பேரறிஞர் திரு. வி. க. மறைவு.

சென்ற முப்பத்தைந்துஆண்டுகளாக, தமிழ்நாட்டினரால் அன்புடனும் நன்மதிப்புடனும் (திரு வி. க. என அழைக்கப்பட்ட திருவாரூர் வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள் 17-9-53 வியாழக்கிழமை இரவு 7-40 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய்தினரென்ற செய்தி எமது உள்ளத்தை உருக்குகின்றது; எழுதவும் முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே "ஆத்மஜோதி„யின் பக்கங்களை இப்பெரியாரின் மணிவாக்குகள் தவருமல் அலங்கரித்து வந்துள்ள உண்மையை இங்கு வாசகர்கட்கு நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை.

தமிழ்நாடு செய்த தவப்பயனகை, இற்றைக்கு எழுபது ஆண்டுகட்முன், சென்னையில் தோன்றிய இந்த மகா மேதை தமிழ்க் கலைக்கோர் நிலைக்களனுய் வாழ்ந்ததோடு, சைவத்தின் சமரசத்திக்கோர் ஒப்பற்ற உதாரணமாகவும் விளங்கினர். பழந்தமிழரின் பண்பாட்டிலிருந்து முகிழ்த்து, திருக்குறளின் உயிர்ப்பாக வளர்ந்த "உலகம் ஒருகுலம்" என்ற கொள்கையே திரு வி. க. வின் வாழ்வின் குறிக்கோளாகவிருந்தது. அவர் பேச்சாலும் எழுத்தாலும் புரிந்த அரும்பணி முழுவதும் "உலகம் ஒருகுலமாதல் வேண்டும்" என்றஉன்னத நோக்கங்கருதியேயாம். அன்பையும் அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட காந்தீயப் பொதுமையில் தமது லட்சியம் நன்கு பொருந்தியிருப்பதை உணர்ந்து அதைப் பரப்புவதிலேயே அயராது உழைத்து மறைந்தார்.

அவரது பூதஉடல் மறைந்தாலும், அவரது புகழுடலும், சிவத்தொண்டும், தமிழ்ப்பணியும், என்றென்றைக்கும் நிலவவேசெய்யும், ஏன்? அவரது வாழ்வே இன்றைய தமிழர்க்கும், இனிவரும் சந்ததியார்க்கும் ஓர் பேரிலக்கியம் போல மிளிரும், குழைந்துருகும் உள்ளத்தோடு அவரது உறவினர்க்கும், நண்பர்கட்கும் ஏனையோர்க்கும் எமது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கிருேம், அவரின் ஆன்மா சாந்திபெற இறைவனை வழுத்துகிருேம்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரான திரு. வி. க. விஞல் அவரது இளமைவயசில் நிறுவப்பட்ட சென்னை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தசபையின் மைதானத்தில், அவர் பேரால் ஓர் அழகிய மண்டபம் அமைக்க முயற்சிகள் நடக்கின்றன. இந்த மண்டப அமைப்புக் குழுவிற்கு ஆதரவளிக்குமாறு வாசகர்களையும் ஏனைய அபிமானிகளையும் கேட்டுக்கொள்கிருேம். நன்கொடையளிக்க விரும்புவோர் "ஆத்மஜோதி" நிலையத்திற்கு அனுப்பலாம். அப்படிச்சேரும் பணத்தைத் திரட்டி சென்னைக்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்படும், நன்கொடையாளரின் பெயர்களும் அடுத்த "ஆத்மஜோதி"யிலிருந்து தொடர்ந்து பிரசுரிக்கப்படும்,

*கொலைபுலை நீக்கியெங்குங் குணஞ்செயல் அறிவைக்காக்க*
*அலைமன அவதிபோக்கி அமைதியைக் காக்க காக்க*
*உலகெலாம் ஒன்றிநிற்க உயரறங் காக்க காக்க*
*கலைவளர் மதியந்தோயுங் கடிவரைச் செம்மைத்தேவே!*

—திரு. வி. க.

---

## வாழ்த்து

வாழியென் ஞண்டவன் வாழி யெங்கோனருள் வாய்மையென்றும்
வாழியெம்மான் புகழ் வாழியென்ஞதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன்மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழி இவ்வையமும் வானமும் மற்றவும் வாழியவே.

வான்முகில் வழாதுபெய்க; மலிவளஞ்சுரக்க; மன்னன்
கோன்முறை யரசுசெய்க; குறைவிலாதுயிர்கள் வாழ்க;
நான்மறை யறங்களோங்க; நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Regd at the G. P O. as a News Paper H-C 59/300

# ஆத்மஜோதி நேயர்களுக்கு!

அன்பர்களே!

இம்மாத ஜோதி, ஐந்தாம் ஆண்டில் பதினோராவது ஜோதியாக உங்கள் கையில் கிடைக்கிறது, அடுத்த மாசத்துடன் ஆத்மஜோதிக்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆதலால் புதுவருடச் சந்தாவை அடுத்தமாதத்திற்கிடையில் அனுப்பிவைத்து ஆத்மஜோதிக்கு உங்கள் ஆதரவை அளிப்பீர்களாக. இவ்வாண்டுச் சந்தாவை இன்றுவரை அனுப்பாதோரும் புதுவருட சந்தாவையும் சேர்த்து அனுப்புவீர்களாக.

**ஆத்மஜோதி நிலையம்**

நாவலப்பிட்டி

## சுத்தானந்தம்.

ஆத்மீக விஷயங்களை உள்ளீடாகக் கொண்ட ஓர் இலவச வெளியீடு. யாவரும் படித்துப் பயனுறக்கூடியதொன்று.

ஆக்கியோன்;—

திரு. மு. ச. லெட்சுமணபிள்ளை அவர்கள்

இப்புத்தகம் வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு 4 சதமுத்திரை அனுப்பிஇலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மு. ச. லெட்சுமணபிள்ளை.

சுத்தசத்தி நிலையம்,

உனுகொலோயா

கொத்மலி போஸ்ட் ● சிலோன்

சரவண-அச்சகம், நாவலப்பிட்டி 25—9—53